**S.C. No.422/2017**
**P.W.2 திரு.திருமலைக்குமார்**
**நாள் – 23.06.2025**

(1, 5, 6 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை, 2, 4 எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3 வது எதிரி இறந்துவிட்டார். )
(மேற்படி சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு உட்படுத்துகிறார்.)

**<u>1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

மதுரை கோரிப்பாளையம் தேவர் சிலை ரவுண்டா மற்றும் மதுரை பெரியார் பேருந்து நிலையம் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை ரவுண்டா ஆகிய பகுதிகளில் கன்ட்ரோல் ரூம் மூலமாக சிசிடிவி கேமரா மூலம் கண்காணிப்பு செய்யப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவத்திற்கு பின்னர் நான் அந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்யவில்லை. சம்பவயிடத்தில் உடைந்ததாக சொல்லப்படும் வீடியோ கேமராவில் உள்ள சிடி மற்றும் பேட்டரிகளை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன், ஆனால் அந்த கேமரா துண்டு துண்டுகளாக சிதறவில்லை, அதிலுள்ள ஆடியோ வீடியோ சென்சார் மற்றும் மைக் பழுதடைந்திருந்தது, பேட்டரி பேக்கின் பின்புறம் வளைந்திருந்தது. மேற்படி கேமராவில் பேட்டரி மற்றும் சிடி இருந்தது. சம்பவ சமயத்தில் கூட்டத்தை கலைப்பதற்கு லத்தி சார்ஜ் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு லத்தி சார்ஜ் செய்யும் போது சுமார் 500 லிருந்து 1000 நபர்கள் சிதறி ஓடினார்கள் என்றால் சுமார் 100 நபர்கள் சிதறி ஓடினார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. கூட்டத்தில் நடந்த தள்ளுமுள்ளுவில் எனது இடது கணுக்காலில் ஏற்பட்ட காயங்களை வைத்து எதிரிகள் என்னை கல்லால் எறிந்து காயப்படுத்தியதாக பொய்யாக மருத்துவ சான்றிதழ் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குவாலிட்டி கேர் மருத்துவமனையில் இருந்த செவிலியரிடம்

எனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று சொன்னேன்.

**2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2ம் எதிரி தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**4, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 4, 5 எதிரிகள் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை –** இல்லை.